தினமணி

# வேல்ஸ் பல்கலை. பட்டமளிப்பு விழா




பட்டமளிப்பு விழாவில் இணைவேந்தர்கள் ஜோதிமுருகன், ஆர்த்தி கணேஷ், விளையாட்டு வீரர் மாரியப்பன், வேந்தர் ஐசரி கணேஷ்,வி.ஜி.சந்தோஷம், நடிகர் சிலம்பரசன், துணைத் தலைவர் ப்ரீதா கணேஷ்.

**தாம்பரம், ஜன.11:** சென்னை பல்லாவரம் வேல்ஸ் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் 11-ஆவது பட்டமளிப்பு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மத்திய தகவல் ஒலிபரப்பு, இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் இணையவழி மூலம் பட்டமளிப்பு விழா பேருரை வழங்கினார்.

விழாவில் வி.ஜி.பி .நிறுவனங்களின் தலைவர் வி.ஜி. சந்தோஷம், நடிகர் டி.ஆர். சிலம்பரசன், விளையாட்டு வீரர் டி.மாரியப்பன் ஆகியோருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

மேலும், பல்கலைக்கழக அளவில் துறை வாரியாக தங்க, வெள்ளிப்பதக்கம்பெற்ற மாணவர்களுக்கும், முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் நேரில் பட்டங்கள் வழங்கப்பட்டன. இதர 4069 மாணவ, மாணவிகளுக்கு இணையவழியில் பட்டங்கள் வழங்கப்பட்டன.

வேல்ஸ் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவன வேந்தர் ஐசரி கே.கணேஷ், இணைவேந்தர்கள் ஏ.ஜோதிமுருகன், ஆர்த்தி கணேஷ், வேல்ஸ் கல்விக் குழுமத் துணைத் தலைவர் ப்ரீதா கணேஷ், துணை வேந்தர் எஸ்.ஸ்ரீமன் நாராயணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.